

விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில்

# தஞ்சையில் ஆகஸ்ட் 3-ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

## துரை,சந்திரசேகரன் எம்,எல்,ஏ, – சாக்கோட்டை க,அன்பழகன் – தி,பழநிவேல் வேண்டுகோள்!







தஞ்சாவூர், ஆக.1-

தமிழ்நாடு விவசாயிகளின் நலன்களை புறக்கணித்து, மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை கோட்டை விட்ட த.வெ.க அரசை கண்டித்து தஞ்சையில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக தோழர்கள் திரளாது கலந்துக் கொள்ள தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்காட்டை க.அன்பழகன், தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் தி.பழநிவேல் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும், மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதை கண்டித்தும் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும், பயிர்க்கடன் தள்ளுபடி மோசடியை கண்டித்தும் மேகதாது பிரச்சினையை கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12 அன்று தண்ணீர் திறக்காதது காவிரிப் பிரச்சினையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுப்பது கர்நாடக முதல்வரைச் சந்திக்கப் போவதாக அதிகாரமற்ற தகவல்களை உலவவிட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகத்துக்கு மேல் துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.க. அரசைக் கண்டித்து வருகின்ற 03.08.2026 திங்கட்கிழமை காலை: 10.00 மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வரவேற்புரையாற்றுகிறார். மனித நேய மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் எம். ஹெச். ஜவாகிருல்லா, ம.ஜ.க.மாநிலத் தலைவர் மு.தமீமுன் அன்சாரி, எஸ்.டி.பி.ஐ மாநிலச் செயலாளர் நெல்லை முபாரக், தி.க. மாநில பொது செயலாளர் இரா.ஜெயக்குமார், தே.மு.தி.க மாவட்டச் செயலாளர் பி.சிவநேசன், மக்கள் நீதி மையம் மாவட்ட அமைப்பாளர் தர்ம.சரவணன், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் கட்சி ஏ.ஆரோக்கியசாமி, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என்.சிவா, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், டி.ஆர்.பி.ராஜா, ஆர்.வைத்தியலிங்கம், எஸ்.எஸ்.சிவசங்கரன், சிவ.வீ.மெய்யநாதன், சி.வெ.கணேசன், முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம், மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச.முரசொலி, கே.என்.அருண் நேரு, கவிஞர் சல்மா, மாநில விவசாய அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜித்து, பி.என்.மணி, உள்ளிட்ட டெல்டா மாவட்டத்தை சார்ந்த திருச்சி, புதுக்கோட்டை, திருவாரூர், அரியலூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்று கண்டன உரையாற்ற உள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் விவசாய பெருங்குடி மக்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள். சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, மாவட்டப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், தி.பழநிவேல் ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இரயில் பயணிகளின்

# பாதுகாப்பை உறுதிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?!

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி !



புதுடெல்லி, ஆக.1-

இரயிலில் பயணம் மேற்கொள்பவரின் பாதுகாப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி கேட்டார்.

அவரது கேள்விகள் வருமாறு:

(a) தமிழ்நாட்டிலிருந்து புறப்படும் மற்றும் கடந்து செல்லும் இரயில்களில் உள்ள

மின்சார சாதனங்கள் மற்றும் மின் அமைப்புகளின் (electrical systems) தரம் மற்றும் நம்பகத்தன்மை குறித்து அரசு ஏதேனும் மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதா, அப்படியென்றால் அதன் விவரங்கள் என்ன;

(b) கடந்த மூன்று ஆண்டுகளில் இத்தகைய இரயில்களில் விளக்குகள், சார்ஜிங் பாயிண்டுகள், ஏர்கண்டிஷனிங், விசிறிகள் மற்றும் இதர மின்சார சாதனங்கள் குறித்து வரப்பெற்ற புகார்களின் விவரங்கள் மற்றும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆண்டுவாரியான விவரங்கள் என்ன;

(c) பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, பெட்டிகளில் உள்ள மின் சாதனங்களை முன்கூட்டியே பராமரிப்பதற்கும் (preventive maintenance), குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்வதற்கும் மற்றும் சரியான நேரத்தில் மாற்றுவதற்கும் அரசாங்கத்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன/எடுக்கப்பட்டு வருகின்றன;

(d)தமிழ்நாட்டிற்குச் சேவை செய்யும் இரயில் பெட்டிகளின் தரம் மற்றும் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்த நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வசதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றனவா, அப்படியென்றால் அதன் விவரங்கள் என்ன; மற்றும்

(e)தமிழ்நாட்டிற்குள்ளும் மற்றும் தமிழ்நாட்டிலிருந்தும் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பாதுகாப்பான, வசதியான மற்றும் தடையற்ற பயணத்தை உறுதி செய்வதற்கும், பயனர் உள்கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கும் முன்மொழியப்பட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகளின் விவரங்கள்என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு இரயில்வே இணை அமைச்சர் விரிவாகப் பதிலளித்துள்ளார்.

மேட்டூர் அணையிலிருந்து 1500 கன அடி தண்ணீர் திறப்பு:

# அறிவிப்பைதிரும்பப்பெற்றத.வெ.க.அரசு!

## டெல்டா பகுதி விவசாயிகள் அதிர்ச்சி!

சென்னை,ஆக.1,

டெல்டா மாவட்ட குடிநீர் தேவைக்காக மேட்டூர் அணையிலிருந்து கூடுதல் நீர் 1,000 கன அடியில் இருந்து டெல்டா மாவட்ட குடிநீர் தேவை அதிகரிப்பின் காரணமாக மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 1000 கன அடியிலிருந்து நண்பகல் 12.00 மணி முதல் 1500 கன அடியாக அதிகரிக்கப் படும் என்றுநேற்று த.வெ.க.அரசின் நீர்வளத் துறை அறிவித்தது.

இந்நிலையில்நேற்று மாலைதிடீர் என்று மேட்டூர் அணையில் இருந்து 1500 கன அடிநீர் திறக்கப் படும் என்ற அறிவிப்பை திரும்ப பெறுவதாக த.வெ.க.அரசின்நீர்வளத்துறை அறிவித்தது. இதனால் அதிகாரிகள் மட்டத்தில்1000 கன அடி திறப்பதா,1500 கன அடி திறப்பதா என்று பெரும் குழப்பம் ஏற்பட்டது,அது மட்டுமின்றி டெல்டா பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் த.வெ.க.அரசின்இந்த அறிவிப்பால் அதிர்ச்சி அடைந்தனர்.

ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே

# மக்கள் தலையில் அநியாயப் பொருளாதாரச் சுமை!

## கூடுதல் மின் கட்டணத்தை சுட்டிக்காட்டி தி.மு.க. ஐ.டி.விங் குற்றச்சாட்டு!




சென்னை,ஆக.1-

3.70 லட்சம் குடும்பங்களுக்குக் கூடுதல் மின்கட்டணம் வசூலிக்கப்பட்டதை ஒப்புக்கொண்டு, தன் நிர்வாகத் திறமை யின்மையை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது தவெக அரசு.

ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே மக்கள் தலையில் அநியாயப் பொருளாதாரச் சுமையைச் சுமத்தியுள்ள இந்த மக்கள் விரோத அரசு இனியாவது திருந்தட்டும்.

நீட் – EWS ஐ கண்டித்து திராவிடர் கழகத்தின் பேரணிக்குத் தடை விதிப்பதா?

# சமூக நீதிக்கு எதிராக த.வெ.க. அரசு - தமிழ்நாட்டில் நடப்பது பா.ஜ.க. அரசா?

## திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப, வீரபாண்டியன் கேள்வி!



சென்னை, ஆக.1-

நீட் 'EWS' இடஒதுக்கீடு எனும் சமூக அநீதியை எதிர்த்து திராவிடர் கழகம் நடத்தும் பேரணிக்கு த.வெ.க. அரசு தடை விதித்திருப்பது சமூக நீதிக்கு எதிரானது என்று திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

நீட் தேர்வு எதிர்த்தும், EWS பிரிவினருக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீடு என்னும் சமூக அநீதியை எதிர்த்தும், திராவிடர் கழகம் நாடு முழுவதும் நடத்தவிருந்த இருசக்கர வாகனப் பேரணிக்கு முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழ்நாடு அரசு தடை விதித்துள்ளது!

பெரியார் அம்பேத்கரைக் கொள்கைத் தலைவர்கள் என்று தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், நீட் தேர்வு தங்கள் கட்சி எதிர்ப்பதாகவும் கூறும், தவெக வின் ஆட்சியில் வெளிப்பட்டுள்ள இந்த சர்வாதிகாரப் போக்கு மிகுந்த கண்டனத்திற்குரியது!

ஆசிரியர் தன் அறிக்கையில் கூறியுள்ளபடி, சமூக நீதியில் கை னவப்பதும், சமூக விரோதச் செயலே ஆகும்!

கடந்த 17ஆம் தேதியே அனுமதி கேட்டுக் கடிதம் அனுப்பியிருந்தும், இன்று காலை சட்டென்று அப்பேரணிக்குத் தடை விதிப்பது எவ்விதத்திலும் ஜனநாயகம் ஆகாது!

தமிழ்நாட்டில் நடப்பது தவெக ஆட்சியா அல்லது பாஜக ஆட்சியா?

இவ்வாறு சுப வீரபாண்டியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசு தொடர்ந்து ஊக்குவிக்க காரணம் என்ன?

# எத்தனால் கலவை பெட்ரோல், வாகனங்களுக்கு பாதுகாப்பானதா?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 1-

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், எத்தனால் கலவை பெட்ரோல் (Ethanol Blended Petrol EBP) திட்டத்தின் தாக்கம், எத்தனால் உற்பத்திச் செலவு, வாகனங்களின் செயல்திறன் மற்றும் எத்தனால் கலவையை மத்திய அரசு தொடர்ந்து ஊக்குவிப்பதற்கான காரணங்கள் குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதாவது, எத்தனால் கலவையால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதன் உற்பத்திச் செலவு அதிகரிப்பு குறித்து மத்திய அரசு ஆய்வு செய்துள்ளதா? மேலும், ஒரு லிட்டர் பெட்ரோல் உற்பத்திச் செலவை விட ஒரு லிட்டர் எத்தனால் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பது உண்மையா? அப்படியானால், வாகனங்களுக்கு எத்தனால் கலவை பெட்ரோலை ஊக்குவித்து, எத்தனால் கலவை பெட்ரோல் திட்டத்தை அரசு ஏன் தொடர்ந்து செயல்படுத்துகிறது? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணைய மைச்சர் சுரேஷ் கோபி எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் :

எத்தனால் கலவை பெட்ரோல் திட்டம், நிதி ஆயோக், வாகன உற்பத்தியாளர்கள், எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் (OMCs), ஆட்டோமொட்டிவ் ரிசர்ச் அசோசியேஷன் ஆஃப் இந்தியா (ARAI), இந்திய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் சங்கம் (SIAM), இந்திய பெட்ரோலிய நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுடன் ஆலோசனை நடத்தி, அறிவியல் அடிப்படையில் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் 2001ஆம் ஆண்டு முன்னோடி திட்டமாக தொடங்கப்பட்ட எத்தனால் கலவை பெட்ரோல் திட்டம், 2006 ஆம் ஆண்டு E5 கலவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. 2013-14ஆம் ஆண்டில் 1.53 சதவீதமாக இருந்த எத்தனால் கலவை, உற்பத்தித் திறன், உள்கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறை வசதிகள் உருவாக்கப்பட்ட பிறகு படிப்படி யாக உயர்த்தப் பட்டுள்ளது.

ARAI, SIAM, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOCL), இந்திய பெட்ரோலிய நிறுவனம் (IIP) மற்றும் வாகன உற்பத்தியாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் களச் சோதனைகளில், E20 எரிபொருள் பாதுகாப்பானது என்றும், பழைய வாகனங்களிலும் குறிப்பிடத்தக்க செயல்திறன் குறைபாடு, இயந்திர சேதம் அல்லது அசாதாரண தேய்மானம் எதுவும் ஏற்படவில்லை என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் E15+ மற்றும் E20 பெட்ரோல் பல ஆண்டுகளாக பயன்படுத்தப் பட்டு வரும் நிலையில், 20 கோடிக்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் மற்றும் 3 கோடிக்கும் மேற்பட்ட பெட்ரோல் கார்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், எத்தனால் கலவையால் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட பரவலான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

2025-26 எத்தனால் விநியோக ஆண்டில் (ESY), கரும்புச் சாறு/சர்க்கரை சிரப்/சர்க்கரையிலிருந்து தயாரிக்கப்படும் எத்தனாலின் ஆலை விலை லிட்டருக்கு 65.61, BHeavy மொலாசஸ் மூலம் 60.73, CHeavy மொலாசஸ் மூலம் 57.97, சேதமடைந்த உணவுத் தானியங்கள் மூலம் 64, உபரி FCI அரிசி மூலம் 60.32, மக்காச்சோளம் மூலம் 71.86 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மொத்த சராசரி ஆலை விலை லிட்டருக்கு 66.61 ஆகும்.

மேலும், IOCL, HPCL, BPCL ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் எத்தனால் கொள்முதல் செலவு (GST மற்றும் போக்குவரத்து செலவுடன்) லிட்டருக்கு முறையே 71.18, 71.10 மற்றும் 71.21 என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 85 சதவீதத்தை இறக்குமதி செய்து வருகிறது. அண்மைய மேற்கு ஆசிய நெருக்கடியின் போது உலகளவில் கச்சா எண்ணெய் விலை 70 முதல் 80 சதவீதம் வரை உயர்ந்தபோதும், இந்தியாவில் எரிபொருள் விலை சுமார் 7 முதல் 8 சதவீதம் மட்டுமே உயர்ந்தது. இந்திய கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு சுமார் 135 அமெரிக்க டாலரை எட்டியபோதும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட எத்தனாலை சுமார் 70 விலையில் கொள்முதல் செய்ததன் காரணமாக டெல்லியில் பெட்ரோல் விலை 94.77 ஆகவே இருந்தது என்றும், இறக்குமதி செய்யும் பெட்ரோலுக்கு மாற்றாக உள்நாட்டில் தயாரிக்கப் படும் எத்தனாலை பயன்படுத்துவதன் மூலம், சர்வதேச கச்சா எண்ணெய் விலை ஏற்ற இறக்கங்களின் தாக்கத்தை குறைக்க முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, எத்தனால் கலவை என்பது எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களுக்கு வருவாய் ஈட்டும் நடவடிக்கை அல்ல; மாறாக எரிசக்தி பாதுகாப்பு, விலை நிலைத்தன்மை, விவசாயிகள் நலன் மற்றும் அந்நியச் செலாவணி சேமிப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் நீண்டகால மூலோபாய முதலீடு என்று மத்திய அரசு தனது பதிலில் தெரிவித்துள்ளது.

துவரங்குறிச்சி நகரக் கழக அவைத் தலைவர்

# அப்துல் மாலிக் தாயார் - கவிஞர் சல்மா எம்.பி.யின் மாமியார் திருமதி ஜமீலா பீவி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

சென்னை, ஆக. 1-

துவரங்குறிச்சி நகரக் கழகத் தலைவர் அப்துல் மாலிக்கின் தாயாரும், கவிஞர் சல்மா எம்.பி.யின் மாமியாருமான திருமதி ஜமீலா பீவி அவர்கள் நேற்று இயற்கையெய்தினார்என்பதைஅறிவிக்கவருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

துவரங்குறிச்சி நகரக் கழக அவைத் தலைவர் அப்துல் மாலிக் அவர்களின் தாயாரும் கழக மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா அவர்களின் மாமியாருமான திருமதி ஜமீலா பீவி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மு. சின்னசாமி

### ஆகஸ்ட் 1 (1979)





தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1967ல் ஈரோடு தொகுதியிலும், 1971ல் மொடக்குறிச்சி தொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு, ஆப்பக்கூடலில் 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி தலைவர் கலைஞர் கலந்து கொண்ட கூட்டத்தில் திடீரென்று சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை கொட்டியதால் பந்தல் மேடை சரிந்து விழுந்ததோடு, மின்சாரமும் தடைபட்டு என்ன நடக்கிறது என்று தெரியாத நிலை ஏற்பட்டபோது, தலைவரை தனது தோளில் தூக்கிக் கொண்டு காருக்கு சென்று சேர்த்தார்.

இந்நிகழ்வை தலைவர் கலைஞர் தனது 'நெஞ்சுக்கு நீதி' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.